**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness : **35**

| | | | |
|---|---|---|---|
| Name: | **குமார்** | Caste: | |
| Father'sName: | வேலுதேவர் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A2,A 6, A11 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **06.03.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசியில் மலையான் தெருவில் குடியிருக்கிறேன். நான் வீடுகளுக்கு பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரை சேர்ந்த விடிஎஸ்ஆர் மற்றும் கமால்மைதீன் மற்றும் சிலரை தெரியும். அனைவரையும் தெரியாது. ஹனிபா, அப்துல்லாவை தெரியும். நான் குமார்பாண்டியன் வகையறா மீதான வழக்கிலும் சாட்சியாக உள்ளேன். குமார்பாண்டியன் வகையறா மற்றும் எதிரிகள் வழக்கு சம்பந்தமாக நீதிமன்றம் வந்து செல்கிறார்கள் என்பது தெரியும். மேற்படி இருதரப்பினருக்கும் இடையே இருக்கும் பிரச்சனை பற்றி எனக்கு தெரியாது. குமார்பாண்டியன் இறந்தநாளில் தான் எங்கள் ஊரில் பிரச்சனை. அதற்கு பின்னர் ஒரு பெரிய பிரச்சனை ஏற்பட்டு இருதரப்பிலும் இருவர் இறந்துபோனார்கள். ஆனால் அந்த பிரச்சனைக்கு முன்னர் அவர்களுக்கிடையே என்ன விரோதம் இருந்தது

என்பது பற்றி எனக்கு தெரியாது. போலீசார் என்னை வீடுதேடி வந்து சாட்சிக்காக கையெழுத்து போடவேண்டும் என்று 15 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் போலீசார் சாட்சிக்கு யாரும் இல்லை கையொப்பம் செய்யும்படி கூறினார்கள். அதனால் நான் கையொப்பம் போட்டேன். நான் எதற்காக என்னை தேடிவந்து கையெழுத்து கேட்கிறீர்கள் என்று கேட்கவில்லை. 15 வருடங்களுக்கு முன்னர் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை போலீசார் விசாரித்தபோது கடந்த 11.08.2007 ம் தேதி மாலை 6.00 மணிக்கு வாகினி தியேட்டர் பக்கம் போய்கொண்டிருந்தபோது மாலிக்காம்பவுண்டுக்குள் விடிஎஸ்ஆர் மற்றும் ஹனிபா, அப்துல்லா ஆகியோர் பேசிக்கொண்டிருந்தனர் என்றும் அதில் விடிஎஸ்ஆர் என்பவர் குமார்பாண்டியன் என்பவரை முடித்ததை போலவே சொர்ணத்தேவர் மக்களை முடித்துவிடவேண்டும் என்றும் செலவுக்கு கவலைப்படவேண்டாம் என்றும் காஜிமுஸ்தபா ஜவுக்கடையை சேர்ந்த கமால் என்பவர் கொஞ்சம் நேரத்தில் வருவதாக கூறியிருக்கிறார் என்றும் இனி அடிக்கடி விடிஎஸ்ஆர்ஐ நேரில் சந்திக்கவேண்டாம் என்று கூறிக்கொண்டிருக்கும்பேதே கமால் காரை ஓட்டி வந்தார் என்றும் அவரும் மேற்படி அனிபா மற்றும் அப்துல்லாவுடன் காரில் இருநதபடியே பேசினார் என்றும் பின்னர் அனிபாவும் அப்துல்லாவும் அனிபா ஓட்டி சென்ற ஆட்டோவில் போனார்கள் என்றும் பின்னர் வி.டிஎஸ்ஆர்கமால் முஸ்தபாவின் காரில் ஏறி சென்றார் என்றும் நான் கேட்ட

விசயத்தை சொர்ணத்தேவடரிடம் கூறினால் அவர் பக்குவமாக எடுத்து சொல்லி பிரச்சனையை தவிர்த்துவிடுவார் என்ற எண்ணத்தில் சொர்ணத்தேவர் மகன்களிடம் கூறாமல் சொர்ணத்தேவரிடம் கூறினேன் என்றும் முன்னதாகவே காவல் துறையினரிடம் கூறியிருந்தால் பிரச்சனையை தவிர்த்திருக்கலாம் என்றும் விடிஎஸ்ஆர் மற்றும் அவர்களுடன் சேர்ந்தவர்கள் திட்டத்தின் படி 14.08.2007 அன்று பிரச்சனை ஏற்பட்டிருக்காது என்றும் எனவே, தறபோது அதுபற்றி காவல் துறையினரிடம் கூறவேண்டும் என்பதற்காக நான் இவ்வழக்கு சம்பந்தமாக விசாரணை மேற்கொண்ட வள்ளியூர் காவல் துணை கண்காணிப்பாளரிடம் நான் கேள்விப்பட்ட விபரத்தை கூறினேன் என்றும் இது சம்பந்தமாக வள்ளியூர் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொர்ணத்தேவர் மகன்கள் எதிரிகளான குறிப்பிடப்பட்டுள்ள வழக்கிலும் சாட்சியாக இந்நீதிமன்றம் ஆஜராகியிருந்தேன். சொர்ணத்தேவர் மகன்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் தற்போது எந்த பிரச்சனையும் இல்லை. அவர்களுக்குள் ஏற்பட்ட ரகசிய உடன்படிக்கையின் படி சொர்ணத்தேவ்ா மகன்களுக்கான வழக்கில் இஸ்லாமியர்களுக்காகவும் இவ்வழக்கில் அவர்களுக்கு எதிரான சாட்சிகளாகிய நாங்கள் பிறழ்சாட்சியாக இருந்தால் எதிரிகள் மீதான வழக்கில் விடுதலை கிடைக்கும் என்ற நோக்கில் நான் சக்திப்பாண்டியன் வகையறா கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் தெரிந்தே பொய் சாட்சி சொல்வது குற்றம் என்று எனக்கு தெரியும். நான் பொய் சாட்சி

சொல்லவில்லை. நான் அரசு தரப்பு வழக்கிற்கு மாறாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**